# 20th Summit of SCO Council of Heads of State

November 10, 2020

## எஸ்சிஓ கவுன்சில் தலைவர்களின் 20 வது உச்சிமாநாடு

நவம்பர் 10,2020

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்சிஓ) கவுன்சில் தலைவர்களின் 20 வது உச்சிமாநாடு நவம்பர் 10,2020 அன்று நடைபெற்றது.( வீடியோ மாநாட்டு வடிவத்தில்). கூட்டம் ரஷ்ய கூட்டாட்சியின் ஜனாதிபதி திரு. விளாடிமிர் புடின் தலைமை ஏற்க, இந்தியத் தரப்பை பிரதம மந்திரி ஸ்ரீ நரேந்திர மோடி வழி நடத்தினார். மற்ற எஸ்சிஓ உறுப்பு மாநிலங்கள் தத்தமது ஜனாதிபதிகள்,அதே நேரத்தில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் பிரதம மந்திரிகள் மட்டத்தில் பிரதிநித்துவப்படுத்தினர். மற்ற பங்கேற்பாளர்கள் : எஸ்சிஓ செயலகத்தின் பொதுச்செயலாளர்,எஸ்சிஓ பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பின் நிர்வாக இயக்குனர், எஸ்சிஓ வின் நான்கு பார்வையாளர்களின் ( ஆப்கானிஸ்தான்,பெலாரஸ்,ஈரான், மங்கோலியா) தலைவர்கள்.

மெய்நிகர் வடிவமைப்பில் நடைபெற்ற முதல் எஸ்சிஓ உச்சிமாநாடு மற்றும் 2017 ஆம் ஆண்டில் முழு உறுப்பினரான பிறகு இந்தியா பங்கேற்ற மூன்றாவது கூட்டம் இதுவாகும். பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி எஸ்சிஓ தலைவர்களுக்கு அளித்த உரையில் ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு Covid-19 தொற்றுநோய் சவால்கள் மற்றும் தடைகள் இருந்த போதிலும் கூட்டத்தை ஏற்பாடு செய்ததற்கு வாழ்த்து தெரிவித்தார்.

பிரதம மந்திரி தனது உரையில், தொற்றுநோயின் சமூக மற்றும் நிதி பின்விளைவுகளால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு உலகத்தின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய சீர்திருத்த பன்முகவாதத்தின் கட்டாயத்தை எடுத்துரைத்தார். 2021 ஜனவரி 1 முதல் இந்தியா ஐ.நா. சபையில் நிரந்தரமற்ற உறுப்பினராவது பற்றியும் அதில் இதனை குறிப்பிடவும் ஒப்புக்கொண்டார். .

பிராந்திய அமைதி, பாதுகாப்பு மற்றும் செழிப்பு ஆகியவற்றில் இந்தியாவின் உறுதியான நம்பிக்கை மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிராக குரல் எழுப்புதல், சட்டவிரோத ஆயுதங்கள் கடத்தல், போதைப்பொருள் மற்றும் பண மோசடி ஆகியவற்றை பிரதமர் மீண்டும் வலியுறுத்தினார். இந்தியாவின் துணிச்சலான வீரர்கள் சுமார் 50 ஐ.நா அமைதி காக்கும் பணிகளில் பங்கேற்றதாகவும், இந்தியாவின் பார்மா தொழில் தொற்றுநோய்களின் போது 150 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு அத்தியாவசிய மருந்துகளை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எஸ்சிஓ பிராந்தியத்துடன் இந்தியாவின் வலுவான கலாச்சார மற்றும் வரலாற்றுத் தொடர்பை பிரதமர் அடிகோடிட்டு காட்டினார் மற்றும் சர்வதேச வடக்கு-தெற்கு போக்குவரத்து தாழ்வாரம், சபாஹர் மற்றும் அஷ்கபாத் ஒப்பந்தம் போன்ற முன்முயற்சிகளுடன் பிராந்தியத்தில் இணைப்பை வலுப்படுத்துவதில் இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். 2021 ஆம் ஆண்டில் எஸ்சிஓ வின் 20 வது ஆண்டு நிறைவை " எஸ்சிஓ கலாச்சார ஆண்டு" என்று அனுசரிக்க முழு ஆதரவையும் அளித்தார், மேலும் பகிரப்பட்ட புத்த பார்மபரியம் குறித்த முதல் எஸ்சிஓ கண்காட்சியை இந்திய தேசிய அருங்காட்சியகம், எஸ்சிஓ உணவு விழாவினை அடுத்த ஆண்டு ஏற்பாடு செய்ய இந்தியாவின் சொந்த முயற்சிகள் பற்றி பேசினார். பத்து பிராந்திய மொழி இலக்கியப் படைப்புகளை ரஷிய மற்றும் சீன மொழிகளில் மொழிபெயர்ப்பது உட்பட.

எஸ்சிஓ கவுன்சில் ஆப் ஹெட்ஸ் தலைவர்களின் அடுத்த வழக்கமான கூட்டத்தை 2020 நவம்பர் 30 அன்று மெய்நிகர் வடிவத்தில் நடத்த இந்தியாவின் தயார் நிலையை பிரதமர் வெளிப்படுத்தினார். புதுமை மற்றும் தொடக்கங்கள் குறித்த சிறப்பு செயற்குழு மற்றும் எஸ்சிஓக்குள் பாரம்பரிய மருத்துவம் குறித்த துணைக்குழுவையும் அமைக்க இந்தியா பரிந்துரைத்துள்ளது. தொற்றுநோய்க்கு பிந்தைய உலகில் ஒரு 'ஆத்ம நிர்பர் பாரத்' ( தன்னம்பிக்கை இந்தியா) பற்றிய இந்தியாவின் பார்வையை அவர் விரிவாகக் கூறினார், இது உலகப் பொருளாதாரத்திற்கும், எஸ்சிஓ பிராந்தியத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஒரு சக்தி பெருக்கமாக நிரூபிக்கக் கூடியது.

அடுத்த ஆண்டு எஸ்சிஓ தலைவராக பொறுப்பேற்கவுள்ள தஜிகிஸ்தான் குடியரசின் ஜனாதிபதி எமோமாலி ரஹ்மோனுக்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்ததோடு, இந்தியாவின் முழு ஒத்துழைப்பையும் உறுதி செய்தார்.

.

**நியூ டெல்லி**
**நவம்பர் 10, 2020**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.